## தலைப்பு 421 – திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு

### 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுகளிலிருந்து 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான, திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 15 மூலதன செலவின விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 11,100,000 மற்றும் ரூபா 63,400,000 கூட்டுத்தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | 2021.08.28 ஆந் திகதிய அரச செலவின மீளாய்வு எனும் தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமை. | நிறுனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதியினை உச்ச அளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | உரிய திட்டமிடலுடன் நிதியேற்பாட்டினை மேற்கொள்ளாமையால் 08 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 11,250,000 கூட்டுத்தொகை மற்றும் 20 மூலதன செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 374,581,000 கூட்டுத் தொகை நிதிப்பிரமாணம் 66 ஊடாக ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | எதிர்பார்த்தவாறு செலவினம் ஏற்படாத காரணத்தால் மிகையான நிதியேற்பாட்டினை பற்றாக்குறையான செலவின விடயங்களுக்கு மாற்றுதல் இடம்பெற்றுள்ளமை. | தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| (இ) உரிய திட்டமொன்றி மதிப்பீடுகளை தயாரித்த காரணத்தால் 09 செலவின விடயங்களுக்குரியதாக ரூபா 327,656,000 கூட்டுத்தொகை நிதிப்பிரமாணம் 66 இன் ஊடாக ஏனைய செலவின விடயங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அது 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. அவற்றுள் ரூபா 1,958,354 கூட்டுத்தொகை எஞ்சியிருந்ததுடன் 19 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | எதிர்பார்த்தவாறு செலவினம் ஏற்படாத காரணத்தினால் மிகை நிதியேற்பாடு பற்றாக்குறை செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டது. அவ்வாறே அமைய சேமிப்புக்கள் மற்றும் 2021.08.28 ஆந் திகதிய அரச செலவின மீளாய்வு எனும் தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் செலவினம் ஏற்படாமை காரணமாக மிகையான நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நிதியேற்பாட்டினை தேவைப்பாட்டினை சரியாக இனங்காண வேண்டியதுடன் பெற்றுக்கொள்ளப் பட்ட நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2.2 முற்பணக் கணக்கின் மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உத்தியோகத்தர்கள் சேவை விட்டு விலகிச் செல்லுதல் மற்றும் ஓய்வு பெறுதல் காரணமாக 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்படாத ரூபா 522,270 ஆன நிலுவை கடன் மீதி காணப்பட்டதுடன், நிலுவையாக காணப்பட்ட காலம் 03 ஆண்டுகள் தொடக்கம் 21 ஆண்டுகள் வரையாகும். | இந்த கடன் மீதி பல்வேறு காரணங்களால் தீர்க்கப்படாதுள்ளதுடன், எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றுநிருப ஏற்பாடுகளின் படி நடவடிக்கை மேற்கொண்டு நிலுவை கடன் மீதி அறவிடுவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் பிரகாரம் அனைத்து பொறுப்புக்களும் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் ரூபா 220,967 பெறுமதியான பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உறுதிச்சீட்டுக்களின் பெறுமதியானது தவறுதலாக பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. எதிர்காலத்தில் சரியாக இனங்கண்டு பதிவு செய்யப்படும் என்பது. | ஆண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

**அவதானிப்புகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 1647(ஆ) | வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பில் வருடாந்த மதிப்பாய்வொன்று நடாத்தப்பட வேண்டிய போதிலும் அது இடம் பெற்றிருக்கவில்லை. | பல்வேறு அசௌகரியங்கள் காரணமாக வாகன மெய்மையாய்வு உரிய திகதியில் மேற்கொள்ள முடியாதிருந்த காரணத்தால் அறிக்கையை தாங்களுக்கு அனுப்ப முடியாதிருந்தமை. | வாகனம் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| ii. நிதிப்பிரமாணம் 1646 | பிரயாணங்கள் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப்பிரதியுடன் அந்தந்த மாதங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அமைச்சிற்கு சொந்தமான 22 குழாம் வாகனங்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படாமையால் சில வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்காமையால் சில வாகனங்கள் அத்தியாவசிய பணிகளுக்கு உரிய நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டுள்ளமையால் ஓட்டக் குறிப்புக்களை உரிய முறையில் சமர்ப்பிக்க முடியாதிருந்தமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த எரிபொருள் மற்றும் நானாவித முற்பணங்களை தீர்ப்பதன் தாமத காலம் 01 மாதங்கள் முதல் 04 மாதங்கள் வரையான வீச்சில் நிலவியது. இந்நிலைமை இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் திருத்துதவற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பட்டியல்கள் தொலைந்து போனமை போன்ற விசேட காரணங்கள் தாக்கமளித்திருந்தமை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2009 யூன் மாதம் 17 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய அமைச்சின் பதவியணியின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் சான்றுறுதிப்படுத்தப் படாது 2021 ஆம் ஆண்டினுள் ரூபா 9,212,498 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் அரச நிர்வாக சுற்றறிக்கை 02/2021(V) மற்றும் 2021/10/01 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைத்தல் தொடர்பில் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடு ஒன்று மட்டும் பேணுதல் போதுமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடு ஒன்று மாத்திரம் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுரைகளுக் கமைய அவசியமான பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 29 ஆந் திகதிய சுயதொழில் உருவாக்கத்திற் கான ஆரம்ப உப கடன் (SEPI) உத்தேச முறைமையின் II கட்ட உடன்படிக்கை | | | |
| i. | 3.2 பந்தியின் (f) பிரிவு | II ஆம் கணக்காண்டு நிறைவடைந்து மூன்று | உடன்படிக்கையின் 3.2 ஆம் பந்தியின் (f) பிரிவின் | கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதங்களினுள் (SEPI Loan Scheme - Phase II) தொடர்பில் மத்திய வங்கியினால் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பிரகாரம் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கும் பொறுப்பு மத்திய வங்கியிடம் காணப்படுகின்றமை. | நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| ii. | உடன்படிக்கையின் 2.2 ஆம் பந்தியின் (b) பிரிவு | கடன்தொகையை வழங்குவதற்கு உரிய அனைத்து விண்ணப்பங்களும் அமைச்சின் தலைவரின்றி 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் பதிவு செய்த 1,295 நலனாளிகளிடையே 1,109 நலனாளிகளுக்காக ரூபா 491,134,875 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. கடன் வழங்கும் வங்கியால் அந்த நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டிருந்த துடன் அந்நடைமுறை இதுவரையிலும் அவ்வாறே இடம்பெற்று வருகின்றமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் தொழில்சார் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் ஊடாக கடனை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள மாணவர்கள் குறித்த பிரதேசத்தின் வங்கிக் கிளைகளுக்கு முன்வைக்கப்படுகின்றமை மற்றும் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கட்டளைகளில் குறிப்பிடபப்ட்டுள்ள அளவீடுகளில் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களுக்காக கடன் வழங்குதல் இடம்பெறுகின்றமை. | குறித்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி அதிகாரச் சட்டத்திற்கிணங்க தேசிய தொழில்சார் தகைமைகளுடனான (NVQ) பாடநெறியை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்வியையும் பயிற்சியையும் வழங்குவதற்கு அங்கீகாரம் அத்தியாவசியமான போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 சனவரி 18 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருந்த 343 விண்ணப்பங்களுக்காக அறிக்கையின் திகதி வரையிலும் அங்கீகாரத்தின் சான்றிதழ்களை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. | சில பாடநெறிகளை அங்கீகரிப்பதற்கு முடியாதுள்ளமைக்கு அத்தியவசியமான அளவீடுகளை அடைந்திராமையே காரணமாக அமைந்துள்ளமை. | உரிய தரத்துடனான தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு அங்கீகாரம் அத்தியாவசிய மானது என்பதால் அப்பணிகளை செயற்திறனாக நிறைவேற்ற வேண்டியமை |
| (ஆ) (i) | 02 கட்டங்களின் கீழ் சுயதொழில் உருவாக்க ஆரம்ப உப கடன் (SEPI) உத்தேச முறைமையின் கீழ் 2020 ஆம் ஆண்டில் எதுவித கடன் கோரிக்கை பத்திரமும் பதிவு செய்யப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்காக ரூபா 90 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய கடன் திட்டமொன்று இல்லாதிருந்தமை மற்றும் இலக்கிடப்பட்ட நலனாளிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப் பட்டிராத காரணங்களினால் ஒதுக்கப்பட்ட தொகையில் | 2020 ஆம் ஆண்டு நாட்டில் கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு மூடப்பட்டு இருந்ததால் இலங்கை மத்திய வங்கியினால் கடன் வழங்கப்படவில்லை. | இக்கடன் உத்தேச முறைமையிலிருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேறும் வகையின் கடன் பெறுநர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 80 மில்லியன் அதாவது 89 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. ஆண்டினுள் கடன்பெறுநர்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு ரூபா 05 இலட்சம் படி ரூபா 1.5 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | கடன் உடன்படிக்கையின் மூலம் சுயதொழில் முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆரம்ப உபகடன் மற்றும் மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கடனை வழங்க இயலுமான போதிலும் 38 சதவீதத்திற்கு அண்மிய நபர்கள் வியாபாரத்தை பரவலாக்குவதற்காக கடன்களை பெற்றிருந்தனர். 14 சதவீதத்திற்கு அண்மிய நபர்கள் குறித்த கடன் தொகையை பயன்படுத்தியிருக்கவில்லை. அமைச்சின் தலையீடு மற்றும் பினதொடர் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் கடன் உத்தேச முறைமையின் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியிருக்கவில்லை என்பது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | செயன்முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தினை நடாத்தி அமைச்சின் உத்தியோகத்தர்களினால் இலங்கை மத்திய வங்கி, நலன்பெறும் நிறுவனங்கள் மற்றும் வங்கி ஆகிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி சிக்கலான நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன் வழங்கும் அடிப்படை நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதை பின்தொடரும் பணிகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் அடையப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 சனவரி 04 ஆந் திகதிய 2209/14 ஆம் இலக்க வர்த்தமானியில் விசேட முன்னுரிமையின் கீழ் இனங்காணப்பட்ட 05 நகர பல்கலைக்கழகங்களில் | சாத்தியவள கற்கை மேற்கொள்ளப்பட்ட 8 மாவட்டங்களில் மாவட்ட செயலாளர்கள் இது தொடர்பில் வினவியுள்ளதுடன் நிலவும் | எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கும் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியளவில் ரூபா 6.11 மில்லியன் செலவிடப்பட்டு 03 நகர பல்கலைக்கழகங்களில் மாத்திரம் ஆரம்ப நிர்மாணங்கள் மற்றும் காணிகளை சுவீகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | பௌதீக வளங்கள் தொடர்பில் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் புறவற பல்கலைக்கழகங்களின் பிரதான மதியுரையாளர்களினால் மாவட்ட மட்டத்தில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | |
| (ஆ) | தொழில்சார் கல்வியில் ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி இளைய சமூகத்தினருக்காக தொழில்சார் பயிற்சி சந்தர்ப்பங்களை வியாபிக்கும் நோக்கில் தொழில்சார் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்காக மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ரூபா 500 மில்லியனான நிதியேற்பாட்டின் அடிப்படையில் 55,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 26,730 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களாக ரூபா 142.4 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் முதல் புலமைப்பரிசில் முறைமையை நடைமுறைப்படுத்தியிருந்த துடன் அக்காலப்பகுதியில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஆரம்ப கட்டங்களாக புலமைப்பரிசில்களுக்கு தகைமை வாய்ந்த மாணவர்களின் தகவல்களை சேகரித்து எமக்கு அனுப்புவதற்கு கருத்தில் கொள்ளக் கூடியதான மாதங்கள் கடந்துள்ளமை. | - மேற்படி - |

**3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 யூன் 20 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய ரூபா 434 மில்லியன் கிரயத்தில் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பல்கலைக்கழக கல்லூரியினை நிறுவுவதற்கு | கிண்ணியா பல்கலைக்கழக் கல்லூரியின் ஒப்பந்தக் கையளிப்பிற்காக அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்திருந்ததுடன் குறித்த அங்கீகாரமானது திறன்கள் அபிவிருத்தி, | தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு இயலுமான வரையில் நிதியேற்பாட்டை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் பதவியணியின் தங்குமிட விடுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,931,683 தொகை 2019 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும் கல்லூரியை நிர்மாணிக்காமை காரணமாக நிர்மாணிக்கப்பட்ட தங்குமிட விடுதிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | திறன்கள் துறைசார் அபிவிருத்தி பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டினை ஈடுபடுத்தி நிர்மாண பணிகளை மேற்கொள்வதற்கே வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய திறன்கள் துறைசார் அபிவிருத்தி பிரிவு யூன் மாதத்தின் இறுதியளவில் ஆரம்பிக்கப்பட்டமையால் அதற்காக 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் 400 மாணவர்களுக்காக ரூபா 300 மில்லியன் கிரயத்தில் மாணவர் விடுதிகளை நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் மதியுரை சேவைக் கட்டணங்களை செலுத்துவதற்காக ரூபா 6,028,015 செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2022 யூன் 30 ஆந் திகதி வரையிலும் மாணவர் விடுதிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் செலவிடப்பட்ட மொத்த பணமும் விளைவற்ற செலவினமாகியிருந்தது. | உத்தேச செயற்திட்டத்திற்காக மதியுரையாளர் ஒருவரை தெரிவு செய்தல் தாமதமேற்பட்டிருந்தது. கடந்த வருடங்களில் 2018 மற்றும் 2019 திறன்கள் துறைசார் அபிவிருத்தி பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு மட்டுப்படுத்தப்பட்டமை, பெறுகைக் குழுவிற்கு அங்கத்தவர்களை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டமை மற்றும் கடமைசார் மற்றும் சுகாதார காரணங்களின் அடிப்படையில் பெறுகைக் குழுவின் உத்தியோகத்தர்கள் நீங்கிச் சென்றமை போன்ற காரணங்களினால் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தமை | திட்டமிட்ட காலத்தினுள் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்துடன் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த அந்த ஆண்டின் இறுதியளவில் நிறைவு செய்யும் நோக்குடனான ரூபா 80 மில்லியன் கிரயத்தையுடைய சமூக புத்தாக்க ஆய்வுகூடம் | சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கமைய அந்த பரிசோதனைக் கூடத்தின் பணிகளை செயற்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2017 ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி | நிதியேற்பாடுகளை ஆக்கபூர்வமான தாகவும் செயற்திறனாகவும் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

| | | |
|---|---|---|
| (Social Innovation Lab) ஆரம்பிக்கும் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>அதற்காக அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) பணிப்பாளரினால் இணக்கம் காணப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் அதன் செயற்பாட்டு பணிகளுக்காக ரூபா 35 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அச்செலவின விடயங்களுக்குரிய எதுவித எழுத்துமூல சான்று அல்லது எதுவித ஆக்கபூர்வமான தீர்மானமொன்று எடுக்கப்பட்டமைக்கான தகவல்கள் முன்வைக்கப்படவில்லை. அதற்காக செலவிடப்பட்ட ரூபா 35 மில்லியன் விளைவற்ற செலவினம் என்பது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | கிடைத்திருந்ததுடன் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான செயற்திட்ட பதிவேடு 2017 ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கையின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (UNDP) பணிப்பாளரினால் இணக்கப்பாடு எட்டப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருந்தமை. | |

## 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றத்தினை பெற்றிராத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) i. 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமப/16/0167/716/008 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தில் தேசிய விஞ்ஞான நிலையமொன்றினை நிறுவுவுதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் அவசியமான காணிகளை சுவீகரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 280 | 2017 ஆம் ஆண்டிற்காக கிடைத்திருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 100 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டின் ரூபா 80 மில்லியனான காணித் துண்டுகளை ஒதுக்குவதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என்பதும் CECB மற்றும் CESL நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த | காணிகளை சுவீகரிக்கும் பணிகளை நிறைவேற்ற வேண்டியதுடன் எஞ்சிய பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் உரித்து அமைச்சிற்கு சுவீகரிப்பதற்கு தவறியிருந்தது. மீளாய்வாண்டில் நிலையத்தினை நிர்மாணிக்கும் பணிகள் 24 மாதங்களினுள் நிறைவு செய்வதற்காக ரூபா 2,819,711,538 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | போதிலும் போதிய நிதியேற்பாடு இல்லாதிருந்தமையால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுவதற்கு முடியாதிருந்தமை. | |
| ii. | உத்தேச நிலையத்தினை நிர்மாணிக்கும் காணிகளை சுற்றிலும் பாதுகாப்பு வேலியை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,837,061 ஆன மதிப்பீடு பணிப்பாளர் (வி.ப.ச) இற்கு சமர்ப்பிப்பதற்கு 03 மாத காலம் தாமதமான காரணத்தால் இடைக்கால ஒதுக்கீட்டு கணக்கின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 25 மில்லியன் தொகையை உரிய பணிகளில் ஈடுபடுத்த முடியாதிருந்தது. 2022 சனவரி கணக்காய்வுத் திகதி வரையிலும் வேலியின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. | செலவினங்களை சிக்கனப்படுத்தும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அரச நிறுவனங்களில் நிர்மாணங்களுக்குரிய மதியுரை பணிகள், திட்டமிடல் மற்றும் நிர்மாண பெறுகை நடைமுறைகளிலிருந்து விலகி நேரடியாக மேற்கொள்வதற்கு 2018.03.21 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரமொன்று இடமளித்திருந்தமையால் NERDC நிறுவனத்தின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை. | உரிய காலத்தினுள் எதிர்பார்த்த நிர்மாணங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாகத்தின் ஊடாக 2030 ஆம் ஆண்டில் அபிவிருத்தி தேசமொன்றாக மாற்றும் நோக்கினை முன்கொண்டு ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவிற்குரிய 06 விசேட முன்னுரிமை துறைகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அவற்றுக்காக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 80 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து | பிரதானமான ஆராய்ச்சி கண்காணிப்பிற்காக தேசிய மட்டத்தில் புதிய தரவுக் கட்டமைப்பொன்றினை நிறுவுதல், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2014 இன் பிரகாரம் ஆராய்ச்சி படிகளை செலுத்துவதற்கு உரிய பணிகளை மேற்கொள்ளல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க வணிகமயப்படுத்தலுக்காக நடைமுறையொன்றினை உருவாக்குதல் போன்ற | திட்டமிடப்பட்ட பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

கொள்வதற்காக ரூபா 7.68 மில்லியன் அல்லது திட்டமிடப்பட்ட தொகையில் 9.6 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதறகு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் இத்தரவுக் கட்டமைப்பினை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க வணிகமயப்படுத்தலுக்காக நடைமுறையொன்றினை தயாரித்தல் ஆகிய செயற்பாடுகள் செயலாளரின் அறிவுரைக்கமைய நிறுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன் கொவிட் தொற்றுநோய் நிலைமையின் கீழ் ஏனைய செயற்பாடுகளும் மந்தமடைந்தது.